**சார்பு நீதிமன்றம், அவிநாசி,**

முன்னிலை : **திரு.C.செந்தில்குமார், B.Com., B.L.**
**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

2026-ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 23-ஆம் நாள், திங்கட்கிழமை

OS.No.288/**2023**
**in**
**CNR No.TNTI16-000776 - 2023**

கனகராஜ் ... வாதி

**..**எதிர்**..**

சீனிவாசன் ... பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்பு 09.03.2026- ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.செல்வராஜ்** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி ஆஜராகாத நிலையில் வாதி தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், சாட்சியம் மற்றும் ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள்வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து வந்த நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதி தொகை விபரத்தில் கண்டுள்ள ரூ.2,26,466/-ஐ குறிப்பிடும் காலத்திற்குள் வட்டியுடன் வாதிக்கு செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கு செலவுத்தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்க கோரியும் தவறும் பட்சத்தில் பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கும் படிக்கும் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார்.

**2.** <u>வாதி வழக்குரையின் சுருக்கம்</u>**:-**

இவ்வழக்கின் பிரதிவாதி தன்னுடைய அவசர மற்றும் வியபார செலவுகளுக்காக கடந்த 30.12.2020-ம் தேதியன்று வாதியிடம் ரூ.2,00,000/- கடன் கேட்டிருந்தார். மேற்படி கடன் தொகைக்கு 100 க்கு மாதம் ஒன்றுக்கு 12% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி வாதி பெயருக்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதி கையொப்பம் செய்து கொடுத்தனர். மேற்படி கடனுறுதி சீட்டை அவிநாசி தாலுக்கா, மடத்துபாளையம் ரோடு, M.K.P.லே அவுட்டில் வசிக்கும் சக்திவேல் என்பவர் எழுதினார். மேலும் மேற்படி கடனுறுதி சீட்டில் சாட்சியாக சேவூர், கானூார் புதுார் சேர்ந்த P.தண்டபாணி என்பவர் கையொப்பம் செய்துள்ளார். முதலில் மேற்படி கடனுறுதி சீட்டை சக்திவேல் என்பவர் பிரதிவாதியிடம் முழு விவரங்களைக் கேட்டு எழுதி முடித்த பின்பு பிரதிவாதியிடம் கொடுத்தபோது அதை படித்து பார்த்து பிரதிவாதி மேற்படி கடனுறுதி சீட்டில் ஒட்டியிருந்த ஒரு ரெவின்யூ ஸ்டாம்ப் மேல் ஒரு கையெழுத்தும், தனது இடது கைபெருவிரல் ரேகையை கடனுறுதி சீட்டின் ரெவின்யூ ஸ்டாம்ப் அருகில் இடது புறத்தில் வைத்ததார். மேற்படி பிரதிவாதி கையொப்பமும் ரேகையும் செய்த சாட்சியான P.தண்டபாணி மற்றும் கடனுறுதிச்சீட்டு எழுதிய சக்திவேல் மற்றும் நானும் உடனிருந்து பார்த்தோம். பின்னிட்டு சாட்சி P.தண்டபாணி மற்றும் கடனுறுதிசீட்டு எழுதிய

சக்திவேல் ஆகியோர்கள் முறையே தங்களது கையெழுத்துகளை செய்து முகவரியை கடனுறுதி சீட்டில் எழுதினார்கள். சாட்சியான P.தண்டபாணி மற்றும் கடனுறுதி சீட்டு எழுதிய சக்திவேல் தங்களது கையெழுத்துகளை செய்து முகவரி எழுதியதை நானும் பிரதிவாதியும் பார்த்தோம். பிரதிவாதி கடனுறுதி சீட்டின் படி என்னிடம் பெற்ற கடன் தொகைக்கு வட்டியோ அல்லது அசல் தொகையோ எதுவும் எனக்கு ஒப்புக்கொண்டப்படி திருப்பிச் செலுத்தவில்லை. இது தொடர்பாக பிரதிவாதியை நான் பலமுறை தொடர்பு கொண்டு கேட்ட போதும் கூட மேற்படி கடன் தொகைக்குண்டான வட்டியோ அல்லது அசல் தொகையையோ திருப்பிச்செலுத்த முன்வரவில்லை. பிரதிவாதியை நான் பல முறை கேட்டும் மேற்படி தாவா கடனுறுதி சீட்டிற்கான அசலோ வட்டியோ செலுத்த முன்வராத காரணத்தினால் என்னிடமிருந்து பெற்ற கடன் தொகையை திருப்பிச் செலுத்தக் கோரி பிரதிவாதிக்கு கடந்த 03.06.2023-ம் தேதியன்று எனது வழக்கறிஞர் மூலம் ஒரு பதிவு தபாலில் அறிவிப்பு அனுப்பினேன். பிரதிவாதி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை தகவல் கொடுத்தும் பெற்று கொள்ளாததால் திரும்பியது. பலமுறை நேரில் கேட்டும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் மேற்படி கடன் தொகையை செலுத்த தவறிவிட்டடார். எனவே, தாவா கடன் தொகையான ரூ.2,62,466/-ஐ பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்ய வேண்டி இந்த தாவாவை வாதியால் தாக்கல் செய்ய நேரிட்டது. அதனால், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**3.** இவ்வழக்கில் பிரதிவாதிக்கு இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதி முன்னிலையாகாத நிலையில் பிரதிவாதி தோன்றா தரப்பினராக கருதப்பட்டார்.

**4.** இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக, விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்களும், வா.சா.1 சாட்சியை ஆக விசாரிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எச்சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** <u>பிரச்சனை**:**</u> -

வாதி இந்த தாவாவில் கோரியபடி வாதிக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதா இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

6. <u>தீர்வு**:-**</u>

**6.1** இவ்வழக்கானது பிரதிவாதி கடந்த 30.12.2020 -ம் தேதியன்று அவசர மற்றும் வியபாரச் செலவுகளுக்காக ரூ.2,00,000/- ஐ வாதியிடம் கடனாக கேட்டு மேற்படி தேதியில் வாதியால் பிரதிவாதிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுவகைக்கு பிரதிவாதி தரப்பில் கடன் தொகைக்கு ஆதரவாக கடனுறுதி சீட்டை வாதிக்கு எழுதி கொடுத்துள்ளார். பிரதிவாதி தாவா கடனுறுதி சீட்டிற்கான அசலோ, வட்டியோ செலுத்த முன்வராத காரணத்தினால் தன்னிடமிருந்து பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்துமாறு 10.07.2023 -ம் தேதியன்று வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டார். பிரதிவாதி அசலோ, வட்டியோ திரும்ப செலுத்தாமல் இருந்ததாகவும், அதனால் வாதி, தாவா தொகையான ரூ.2,62,466/-ம், வட்டியையும், செலவுத்தொகையையும் செலுத்த வேண்டி பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2** வாதி தனது வழக்கை நிரூபணம் செய்யும் வகையில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு சான்றாவணத்திலிருந்து 30.12.2020 -ம் தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 03.06.2023-ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 10.07.2023 -ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்வா.சா.ஆ 3 ஆகவும், 17.07.2023-ம் தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்

கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சல் கவர் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். கடந்த 20.05.2023-ம் தேதியன்று வியபார செலவிற்காக ரூ.2,62,466/-ஐ வாதியிடமிருந்து பெற்றுக் கொண்டு கடனுறுதி சீட்டில் ஸ்டேம்புகளின் மீது பிரதிவாதி கையெழுத்து செய்தும், அதற்கு அருகில் இடது கைபெருவிரல் ரேகையும் வைத்துள்ளார். பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விபரமும், கடனுறுதி சீட்டை எழுதி மற்றும் சாட்சி கையொப்பம் இட்டுள்ள சரவணக்குமார் தெரியும் என்றும், அதிலுள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.1 சாட்சியத்திலிருந்தும், வாதி தரப்பு சான்றாவணத்திலிருந்து கடந்த 30.12.2020-ம் தேதியன்று எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டின் மூலம் பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்றுள்ளார் என்பதும், பிரதிவாதி, வாதிக்கு கடனுறுதிச் சீட்டு கொடுத்ததை உறுதி செய்யும் வகையில் 30.12.2020 - ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1 ஐ பிறப்பித்து கொடுத்துள்ளார் என்பதும் ஊர்ஜிதமாகிறது. மேற்படி வாதியின் வழக்கு பொய்யானது என்று சொல்லும் வண்ணம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்வழக்கினை மறுத்து கட்சி செய்யவில்லை. வா.சா.ஆ 1-ன் மூலம் பிரதிவாதி கடனுறுதிச் சீட்டு செய்து கொடுத்து உறுதி ஆவணம் எழுதிக் கொடுத்துள்ள நிலையில் இவ்வழக்கு உரிய காலக்கெடுவிற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையில் வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், தாவா கடன் தொகையை பொறுத்து தீர்ப்பாணை பெற வாதி அருகர் ஆவார் என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகின்றது.

**6.3** இந்நிலையில், வாதியின் வழக்கு பொய்யானது என்று சொல்லும் வண்ணம் இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட தாவா சம்மனை பிரதிவாதி பெற்றுக் கொண்டுள்ள போதிலும், பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்வழக்கினை ஆட்சேபித்து எதிர்வழக்காட முன்வரவில்லை. அதனால் இந்நீதிமன்றமானது பிரதிவாதியை கடந்த 09.03.2026-ம் தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பிரதிவாதி வாதிக்கு

30.12.2020-ம் தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ.1-ஐ எழுதிக்கொடுத்து கடன் பெற்றுக்கொண்டு எழுதிக் கொடுத்துள்ள நிலையில் இவ்வழக்கு உரிய காலக்கெடுவிற்குள் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

முடிவாக,**வாதியின் தாவா அனுமதிக்கப்பட்டு, தாவா தொகையான** ரூ.2,62,466/-**ம், அசல் தொகை ரூ.2,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரையில் 9% வட்டியும் தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையில் 6% வட்டியும் சேர்த்து பிரதிவாதி 2 மாத கால அவகாசத்திற்குள் வாதிக்கு செலுத்தப்பட வேண்டும் என்று செலவுத்தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 23.03.2026 அன்று அவையறிய பகரப்பட்டது.

ஓம்/- C.செந்தில் குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**:-**

வா.சா.1 – கனகராஜ் (வாதி)

வா.சா.2 - தண்டபாணி

<u>வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**:-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 30.12.2020 | பிரதிவாதி வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 03.06.2023 | வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 10.07.2023 | வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அசல் |
| வா.சா.ஆ.4 | 17.07.2023 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சல் கவர் | கணினி நகல் |

<u>பிரதிவாதி  தரப்பில் சாட்சிகள் :</u> - இல்லை

<u>பிரதிவாதி  தரப்பில் சான்றாவணங்கள்:</u> - இல்லை

ஓம்/- C.செந்தில் குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

அ.வ.எண்.193/2023

**வரைவு/சீரான தீர்ப்புரை**

நாள் 30.06.2025